# நகுலன்
# NAGULAN

இதழ் : 01 | செப் - டிசெம்பர் 2012 | அன்பளிப்பு : 30/=


## மீண்டும் தொடங்கும் மிடுக்கு



பஞ்ச பாண்டவர்கள் போல, இராம பிரான் போல எமது பாடசாலையும் 22 ஆண்டுகள் வனவாசம் சென்றது. குட்டியைக் காப்பதற்காக வாயில் கௌவி ஒவ்வோரிடமாகக் கொண்டு செல்லும் பூனையைப் போல நகுலேஸ்வரா அன்னையை அதன் "பிள்ளைகள்" அனைவரும் காத்தனர். நீண்ட துன்ப துயரங்களைக் கடந்து நாம் ஊர் மீண்டு விட்டோம்.

மீண்டும் ஒரு புது வசந்தத்தைக் காண்பதற்காய், நகுலேஸ்வராவின் நாமத்தை மலரச் செய்வதற்காகப் பாடுபட வேண்டிய தருணம் இது. 2012 ஜனவரி 02ஆந் திகதி இந்த மண்ணில் மீண்டும் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட 40 அடிக் கட்டடம், தற்காலிக கொட்டகை ஆகியவற்றுடன் சுடுவெயிலும், சுழல்காற்றும், மழை வெள்ளமுமெனக் கழித்து இப்போது மெல்ல மெல்லத் தன்னிறைவைக் கண்டு வருகிறோம். 90 அடி நீள மாடிக் கட்டிடம்,ஆய்வுகூடம், நூலகம், கணனிக் கூடம், ஆண்கள் பெண்களுக் கான மலசலகூடத் தொகுதிகள், சமையலறை எனக் கடந்த 10 மாதங்களுக்குள் பல வசதிகளைப் பெற்று விட்டோம்.

(23ஆம் பக்கம்)

## காலத்தினாற் செய்த உதவிகள்

- Save the Children நிறுவனம் 8,30,000 ரூபா செலவில் 40' x 20' கட்டடத்தை புனரமைப்புச் செய்து தந்துள்ளதுடன் தற்காலிக கொட்டகைகள் மூன்றினை சண்டிலிப்பாயிலிருந்து பிடுங்கி கீரிமலையில் மீள நிறுவுவதற்கான நிதியினையும் வழங்கியது. அத்துடன் பெண்களுக்கான மலசலகூடத் தொகுதியினையும் அமைத்துத் தந்துள்ளது.
- Save the Children நிறுவனம் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கான கம்பங்களைத் தந்ததுடன், விளையாட்டு உபகரணங்களையும் வழங்கியது. அத்துடன் 83 மாணவர்களுக்கு இலவசமாக பாதணி, கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகளை வழங்கியது.
- மூளாயில் வசித்து வரும் நலன்விரும்பி ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர் திரு. வன்னியநாதன் ஞானசம்பந்தன் அவர்கள் 1 பரப்பு 2.68 குழி பரப்பளவுடைய காணியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.
- சேவாலங்கா நிறுவனம் கிணறு புனரமைத்துத் தந்ததுடன் மைதானத்தை துப்புரவு செய்வதற்கும் உதவியது.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 90'x25' அளவுடைய ஆய்வுகூடத்துடன் கூடிய மாடிக் கட்டடம், ஆண்கள் மலசல கூடத்தொகுதி, தண்ணீர்த்தாங்கி என்பன 72 இலட்ச ரூபா மதிப்பீட்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கௌரவ பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் அவர்களின் ஏற்பாட்டில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 90'x25' அளவுடைய மாடிக் கட்டடக் கீழ்த்தளம் 50இலட்ச ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதில் நூலகம், கணனி அறை, வகுப்பறை என்பன உள்ளடங்கியுள்ளன.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் கட்டட இடிபாடு களை அகற்றி துப்புரவு செய்து தந்தது. நகுலேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கம் இச் செயற்பாட்டை நல்ல முறையில் முன்னெடுத்தது.
- பாடசாலைக்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் பொருட்களை கல்வித் திணைக்கள அனுமதியுடன் திரு. த. வேல்ராஜா, திரு. வே. குமாரவேலு ஆகியோர் தமது வீடுகளில் வைத்துப் பாதுகாத்துத் தந்தனர்.
- வலிவடக்குப் பிரதேச சபை பவுஸர் மூலம் இலவசமாக குடிநீரை விநியோகம் செய்தது. அத்துடன் உள்ளக வீதியை அமைத்துத் தரவும் இணங்கியுள்ளது.
- வலி வடக்கு பிரதேச செயலகம் பாடசாலைக்கான உதவித் திட்டங்களைப் பெறுவதில் உதவி வருகின்றது.
- தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவி வருகிறது.
- வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் பாடசாலையை சொந்த இடத்தில் நிறுவி, கட்டியெழுப்புவதற்கான அனைத்து செயற்பாடுகளுக்கும் முன்னுரிமையளித்து உதவி வருகின்றது.

*(23 பக்கம்)*

# மனித வாழ்வை வளப்படுத்தும் இலக்கியங்கள்



நீதிக் கருத்துக்கள் மூலம் வாழ்க்கையை மேம்படுத்துவன இலக்கியங்களாகும். உலகில் பல்வேறு இனங்கள், மொழிகள், கலாசாரப் பாரம்பரியங்கள் உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் அந்தந்த மக்களின் வாழ்வை வளம்படுத்தும் வகையில் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. அவ்வகையில் எமது அன்னைத் தமிழிலும் ஆயிரம் ஆயிரம் இலக்கியங்கள் தோன்றி நிலைத்து உள்ளன. அவற்றுள் சிறப்புப் பெற்றனவாக இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களும், ஐம்பெரும் காப்பியங் களும், நளவெண்பா, சங்க இலக்கியங்கள் என்பனவும் விளங்குகின்றன.

இவையனைத்தும் கூறும் கருத்துக்கள் பெரும்பாலும் ஒரே தன்மைய்யக் கொண்டனவாகும். இவற்றில் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய பல்வேறு நீதிக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. நீதி தவறாத ஆட்சிமுறை, சகோதரத்துவம், நட்பு, பிறர் மனை நயவாமை, செய்நன்றி கொல்லாமை, உண்மையுணர்த்தல் முதலிய பல்வேறு நற்கருத்துக்களை இவ்விலக்கியங்களில் நாம் காணமுடியும்.

இராமாயணம் பல்வேறு நீதிக் கருத்துக்களை முன்வைக்கும் உயரிய இலக்கியமாகும். இதன் முக்கிய கதாபாத்திரமான இராமன் ஓர் உத்தம புருஷனாகப் படைக்கப்பட்டுள்ளார். ஒரு மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிய கதாபாத்திரமாக இராமன் விளங்குகின்றார். அவர் மனைவியான சீதையும் ஒரு பெண்ணுக்குரிய நற்பண்புகள் யாவற்றையும் கொண்டுள்ளார். தனது கணவன் நாடு நீங்கி வனவாசம் செல்லும் போது கணவனுடன் சேர்ந்து தானும் காட்டிற்குச் சென்றார். அதே போல ஒரு மனிதன் எவ்வாறு வாழக்கூடாது என்பதை வெளிப்படுத்தும் பாத்திரமாக இராவணன் விளங்குகிறார். சகோதரத் தவத்தை அழகாக பரதனும், இலக்குவனும் வெளிப்படுத்துகின்றான். நட்பை வெளிப்படுத்தி குகனும், தீய செயல்களை வெளிப்படுத்தி கூனியும் படைக்கப்பட்டுள்ளனர்.

இராமாயணம் போலவே அரிய நீதிக் கருத்துக்களை மகாபாரதம் முன்வைக்கிறது. துரியோதனன் முதலிய கௌரவர்களால் வஞ்சக

வழியில் ஏமாற்றப்பட்டு, நாடிழந்து காடேகிய பஞ்சபாண்டவர்களின் வாழ்க்கை மகாபாரதத்தில் முன்வைக்கப்படுகிறது. ஒவ்வொரு பாத்திரங்களின் குணவியல்புகளால் உலக நீதிக்கான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.


மனிதர்களின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் அவர்களின் உள்ளத்தை மேம்படுத்தி நல்ல உணர்வுகளை வளர்ப்பனவாக இவ்விலக்கியங்கள் விளங்குகின்றன. வான்மீகி, கம்பர், வியாசமுனிவர், இளங்கோவடிகள், திருவள்ளுவர், சங்கப் புலவர்கள், புகழேந்திப் புலவர் முதலியோர் அழியாத இலக்கியங்களைப் படைத்து நெஞ்சில் நிறைந் துள்ளனர். இலக்கியங்கள் பொக்கிசம் போன்றன. இவற்றை யாத்த புலவர்கள் எமது பண்பாட்டின் தூண்கள் போன்றவர்கள். எனவே மாணவர்களாகிய நாம் இந்த அரிய பொக்கிசங்களைப் படித்து இன்புறுவதுடன் அவற்றின் கருத்துக்களை உள்வாங்கி சமூகம் போற்றும் மனிதர்களாக வாழ்வோமாக.

**சி. நிதர்சனா**
தரம் - 11

## கைவண்ணம்



**தி. லக்ஷன்** - தரம் 06



**பா. விஜயகாந்** - தரம் 06


# பிராணிகளிடத்தே வளர்ந்துள்ள விசேட ஆற்றல்கள்

## 01) நாய்



01. வீட்டாரையும் வெளியாரையும் இனங்கண்டு கொள்ளும்
02. திருடனையும் வெளியாரையும் உள்ளே வர அனுமதிக்காது
03. மோப்பசக்தி மூலம் எதிரியை அறிந்து கொள்ளும்
04. படுக்கும்போது மோப்ப சக்தியை அறிவதற்கு காற்றின் திசையை அறிந்து படுக்கும்.

## 02) மாடு



01. மோப்பசக்தி மூலம் எதிரியை அறிந்து கொள்ளும்.
02. மேய்ச்சலுக்கு வெளியில் சென்று மீண்டும் இருப்பிடத்திற்குத் திரும்பும்.
03. உழுதல், வண்டி இழுத்தல் போன்ற வேலை களைச் செய்யும்.

## 03) கிளி



01. தாவர உண்ணி
02. பழங்கள் தானியங்களை விரும்பி உண்ணும்.
03. பேசப் பழக்கினால் பேசும் திறமை காணப்படுதல்
04. கூட்டமாக வந்து உணவை உண்ணும்.

## 04) பூனை



01. அனைத்தும் உண்ணி
02. தனியாகவே உணவை உண்ண விரும்பும்.
03. எலி, ஓணான், சிறிய பறவைகளைப் பிடித்து உண்ணும்.
04. சிறுவர்களைக் கவரும் தன்மை கொண்டது.

### 05) காகம்



01. தந்திரமுள்ள பறவை
02. உணவைக் கண்டால் கா கா எனக் கரைந்து தனது இனத்தை அழைத்து உணவை உண்ணுதல்.
03. எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றலை அதிகளவு கொண்டுள்ளது.

### 06) யானை



01. மண்ணில் விழும் சிறிய குண்டூசியைக் கூட தும்பிக்கையால் எடுக்கும்.
02. விலங்குகளில் அதிகளவு ஞாபகசக்தி கொண்டது.
03. ஏழு தடவைகள் பற்கள் விழுந்து முளைக்கும்.
04. மிகப்பெரிய பாரங்களை இலகுவாகச் சுமந்து செல்லும்.
05. தும்பிக்கை மூலம் பாரங்களை தூக்குதல்.
06. பண்டைக் காலத்தில் யானையை படையில் சேர்த்தனர்.
07. தாவர உண்ணி.

### 07) புலி



01. மோப்பசக்தி மூலம் தனக்கு இரையாகக் கூடிய மிருகங்களை அறிந்து கொள்ளும்.
02. இரையைப் பிடிப்பதற்காக புத்திசாதுரிய மான முறைகளை மேற்கொள்ளும்.
03. இரையைப் பிடிக்கும் போது பதுங்கி அருகில் சென்று கொடூரமாகத் தாக்கும்.

**ஜெ. டிலான்சன்**
தரம் - 4

# நனோ தொழிநுட்ப யுகத்துள் நுழைவோம்

திருமதி யா. சத்தியசீலன்

(768ஆம் இலக்க பேருந்தில் ஏறி மாணவர்கள் கல்விச் சுற்றுலாவிற்கு ஆயத்தமாகின்றனர்)

மகிழா : வாருங்கள். நாம் இப்போது பிரயாணம் செய்யும் போது ஏற்படும் களைப்பை மறக்க உரையாடுவோம்.

சுவாதிகா : நாம் ஐந்தாவது தொழிநுட்ப புரட்சியை வெற்றி கொண்டு விட்டோம்.

தனுசிறி : நனோ தொழிநுட்பத்தைத் தானே குறிப்பிடுகிறீர்கள்

சுவாதிகா : ஆமாம்

மகிழா : நனோ என்ற சொல் குள்ளன் என்ற கருத்தைக் குறிக் கின்றது.

பிரியன் : அதாவது நனோ என்ற சொல் மில்லியனில் ஒரு பங்கைக் குறிக்கின்றது. அதாவது $10^{-9}$ யை குறிக்கின்றது.

மகிழா : பிரியன் மாதிரி குள்ளன். அப்படித்தானே! அதுதான் பிரியன் நல்லா ஞாபகம் வைத்திருக்கிறார்.

தனுசிறி : நனோ தொழிநுட்பத்தின் அடிப்படையாகக் கருதப்படுவது யாதெனில் அடியிலிருந்து நுனிவரை நனோ துணிக்கை களை ஒன்றிணைத்து இரசாயன பிணைப்புக்களின் மூலம் உருவாக்கப்படும் உற்பத்திக்குப் பயன்படுத்துதலாகும்.

றோகித் : நனோ தொழிநுட்பத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் எரிக் ட்ரெக்ஸ்லர்.

சஜித் : 1987ஆம் ஆண்டு இவரினால் வெளியிடப்பட்ட எதிர்காலம் நனோ தொழினுட்ப யுகம் எனும் நூலின் மூலம் எண்ணக்கரு உலகம் முழுவதும் பிரசித்தமானது.

பிரியன் : அந்த நேரம் நான் பிறக்கவே இல்லை. அந்தாள் பெரிய மண்டைக்காய் தான்.

சஜீத் : பிரியனுக்கு எப்பவும் பகிடிதான்

தனுசிறி : இயற்கை நனோ தொகுதிக்கு உதாரணம் உயிர்க்கல மாகும்.

மகிழா : கலத்தினுள் உயிர்ச்செயற்பாடு நடைபெறுகின்றது. நனோ தொழிநுட்பமூடாக எதிர்காலத்தில் இதிலும் பார்க்க பயனுறுதி மிக்க செயற்கை தொகுதி உருவாக்கப்படலாம்.

தனுசிறி : ஒளித்தொகுப்பு எனும் செயற்பாடு செயற்கைத் தொகுதி யூடாக நடாத்தப்பட முடியுமாயின் உலகின் உணவுப் பிரச்சினை நீங்கிவிடும் அல்லவா.

மகிழா : ஆமாம்

சுவாதிகா : தம்பிக்கு கோயில் திருவிழாவில் வாங்கிய காரைத் தம்பி எறிந்துவிட்டான். உடனே உடைந்துவிட்டது.

மகிழா : நனோ தொழிநுட்பத்தின் மூலம் அணுக்களையும் மூலக் கூறுகளையும் பிழையின்றி இடங்களில் அமைத்து உயர்தரமுள்ள பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். அதாவது எளிதில் உடையாத காரை உற்பத்தி செய்ய முடியும்.

சுவாதிகா : அதாவது காசும் மிச்சம். வீடு முழுவதும் உடைந்த பொருட்களும் இருக்காது.

சஜீத் : நனோ மூலக்கூற்றுச் சாதன மாதிரிகள் ஒரு பகுதியோ அல்லது பல பகுதிகள் கொண்டு இரசாயன முறையில் இணைத்தல் நானோ தொழினுட்பச் சட்டங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. காபன் நானோக் கட்டமைப்பாக காபன் பக்கிபோல், காபன் நனோ ஹோன், காபன் நனோ குழாய்கள் பயன்படுகின்றன.

பிரியன் : இங்கு பயன்படுத்தப்படும் பிரதான மூலகம் காபனாகும். காரீயம், வைரம் என்பன காபனின் பிறதிருப்பங்களாகும். புளோரின் செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட காபனின் மூன்றாவது பிறதிருப்பமாகும்.

மகிழா : காபன் பக்கிபந்து, காபன் நனோ குழாய், காபன் நனோ ஊதுகுழாய் என்பன புளோரின் மூலம் உற்பத்தி யாக்கப்பட்ட சில பொருள்களாகும்.

சுவாதிகா : காபன் பக்கிபந்து காற்பந்தின் அமைப்பை ஒத்தது. காபன் நனோ குழாய் அறுகோண வடிவங் கொண்ட காபனினாலான சிலிண்டர் அமைப்பைக் கொண்டது. காபன் நனோ ஊதுகுழாய் அறுகோணவடிவம் கொண்ட காபனினாலான கூம்பக வடிவத்தைக் கொண்டது.

றோகித் : நனோ தொழினுட்பவியலுக்கு அவசியமான கனிப்பொருள் இலங்கையில் காணப்படுகின்றதா?

சஜீத் : ஆம். காரீயம், அப்பற்றைற்று, இல்மனைற்று, சேர்க்கோன், மொனோசைட்டு, படிகம் என்பன காணப்படுகின்றன.

சுவாதிகா : நனோ தொழினுட்பவியலில் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் முறை (Bottom - up) காணப்படுவதால் உயர்தரம் கொண்ட பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

மகிழா : விஞ்ஞானிகள் நனோ ரோபோக்கள் மூலம் குறிப்பிட்ட வேலையை அல்லது சில வேலைகளை மாத்திரம் செய்ய

எண்ணியுள்ளனர். இங்கு நுண்ணிய பொருள்களை அவதானிக்க இலத்திரன் நுணுக்குக்காட்டி பயன்படுத்தப் படுகின்றது.

பிரியன் : அதாவது இவ்வுபகரணங்கள் விஞ்ஞானிகளை நனோ உலகிற்குள் பிரவேசித்து அதனைக் கையாள்வதற்குரிய ஆற்றலை வழங்குகின்றது.

தனுசிறி : நனோ தொழிநுட்பவியல் வைத்தியத்துறை, பொறியியல் துறை, சக்திவலு, நுகர்வுப்பொருள், தொலைத்தொடர்புத் தொழிநுட்பவியல் போன்ற பல்வேறு துறைகளில் புரட்சியை ஏற்படுத்தும்.

**காட்சி – 2**

**(ஆடை தொழிற்சாலையை மாணவர்கள் பார்வையிடுகின்றனர்)**

மகிழா : சாதாரண துணிவகைகளில் காணப்படும் சிறிய துளைகளில் தூசி துணிக்கைகள் படிவதனால் அவற்றைத் தூய்மையாக்கும் தேவை ஏற்படுகின்றது அல்லவா?

பிரியன் : ஆமாம். ஆனால் நனோ தொழிநுட்பவியலின் மூலம் தூசு துணிக்கைகளும் எண்ணெயும் படியாதவாறு துணி வகைகளும் ஆடைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தனுசிறி : எவ்விதம் அழுக்குப் படியாத துணிவகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

பிரியன் : அதாவது நனோ உற்பத்திகளில் துளைகள் மிகவும் சிறியவை. இதனால் இவற்றில் தூசுத் துணிக்கைகள் தங்குவதில்லை. மேலும் நிறம் மாறக்கூடிய உடை, குளிர், சூடு எள்பவற்றைத் தாங்கக்கூடிய உடை, உயர்தரம் கொண்ட காலுறை என்பன இதன்மூலம் தயாரிக்கப்பட்டு கின்றன.

தனுசிறி : அப்பா என்ன வெயில். ஒரே வியர்வை. நான் கறுக்கப் போறன்.

பிரியன் : தனுசிறிக்கு எப்பவும் பெரிய எண்ணம். தான் பெரிய அழகி என்று. கங்கையில் மூழ்கினாலும் காகம் கொக்காகுமா?

தனுசிறி : தான் மட்டும் சென்ட் அடித்துக்கொண்டு கிறீம் பூசிக்கொண்டு வருவார். மற்றவையை நக்கல் அடிப்பார்.

மகிழா : கவலையை விடுங்கள் உடலுக்குப் பங்கம் விளைவிக்கும் சூரியக் கதிர்களிலிருந்து பாதுகாப்பைப் பெறப் பயன்படும் கிறீம் வகைகள், தோலில் ஈரலிப்பைப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் கிறீம் வகைகள் என்பவற்றில் நனோ

துணிக்கைகளின் மூலம் அவற்றின் தரம் உயர்த்தப் பட்டுள்ளது.

றோகித் : என்னடாப்பா இந்த சுவர் பெயின்டைக் கண்டு கனகாலம் போலத் தெரியுது.

சஜீத் : இதற்கு தீர்வு ஒரே வழிதான். நனோ மூலம் தயாரிக்கப்பட்ட நிறப்பூச்சுக்களைப் பூசுவதன் மூலம் நீண்டகாலம் நிறம் மங்காது. சுவரில் வெடிப்புக்கள் ஏற்படாது தடுக்கலாம்.

பிரியன் : மேசன்மாரை நம்பக்கூடாது. சீமெந்து, மண் கலவையை மாத்தி போடுவினை.

சுவாதிகா : பிரியனுக்கு எப்பவும் எல்லோர் மேலேயும் சந்தேகம்தான்.

மகிழா : என்ன கரண்ட் நின்றுவிட்டது.

தனுசிறி : உந்த Electricity Board காரங்கள் உப்பிடித்தான்.

சுவாதிகா : அவங்களும் பாவம்தான். டீசல் வராட்டி, இஞ்சின் பழுதாப் போனால் என்ன செய்வினம்.

பிரியன் : இதற்கு என்ன வழி செய்யலாம். லக்சபானா கரண்ட் வந்தால் இந்த பிரச்சினை வராது.

சுவாதிகா : அப்படிச் சொல்ல ஏலாது. மழை இல்லாட்டி கரண்ட் கட் ஆகும்.

மகிழா : இதற்கு ஒரே தீர்வு. நனோ தொழிநுட்பவியலின் மூலம் வினைத்திறன் மிக்க விலை குறைவான சூரியக்கலங் களைத் தயாரித்தல் ஆகும்.

றோகித் : நனோ தொழிநுட்பவியல் மூலம் மீயொடுக்கிகள், மீகடத்திகள் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன.

மகிழா : எனக்கு தாகம் எடுக்கிறது. அந்தக் குழாயில் இருந்து வரும் நீரை அருந்தப் போகிறேன்.

பிரியன் : பொது இடங்களில் உள்ள நீரை அருந்தக்கூடாது. வரும் போது வீட்டில் இருந்து நீர் எடுத்துக் கொண்டு வந்திருக் கலாம் தானே.

மகிழா : ஆமாம். நான் மறந்து விட்டேன்.

பிரியன் : நனோத் துணிக்ழைகள் மூலமாக உருவாக்கப்படும் ஒளியில் ஊக்கிகள் செயற்பாட்டை நீர் தூய்மையாக்கும் பொருட்டு பயன்படுத்த முடியும்.

மகிழா : ஒளியில் ஊக்கிக்கு டைட்டோனியம் ஒட்சைட்டு, ரின் ஒட்சைட்டு, சிங்கு சல்பைட்டு போன்றன ஒளியியல் ஊக்கிக்கு பயன்படுத்தப்படுகின்றது அல்லவா.

பிரியன் : ஆமாம்

சுவாதிகா : அங்கு நிற்கும் சைக்கிள் எவ்வளவு கறள் பிடித்து இருக்கின்றது.

றோகித் : நனோ வர்ணப்பூச்சின் லோட்டஸ் விளைவு காரணமாக உலோகம் அரிப்புக்குள்ளாகாமல் தவிர்க்கப்படுகின்றது. நனோ சேர் கோனியா எனப்படும் வர்ணப் பூச்சின் மூலம் வாகன இயந்திரங்களில் ஏற்படும் உலோக அரிப்புத் த்விர்க்கப்படுகின்றது.

## காட்சி – 3

(புற்று நோய் வைத்தியசாலையைப் பார்வையிடுகின்றனர்)

றோகித் : என்ன கொடுமை இவர்களுக்கு விமோசனம் கிடையாதா?

சஜீத் : ஏன் இல்லை. நனோ தொழினுட்பத்தினூடாக புற்று நோய்க் கலங்களில் மாத்திரம் சிகிச்சை மேற்கொள்ள முடியும். தற்போது புற்றுநோயாளிகள் பயன்படுத்தும் மருந்துகள் ஏனைய கலங்களையும் சென்றடைகிறது. இதனால் வீண் விரயம் ஏற்படுவதுடன், மாறுவதற்கு கூடிய காலமும் எடுக்கின்றது.

றோகித் : யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையும் தற்போது அதிகமாக உள்ளது.

சுவாதிகா : இன்சுலின் ஓமோன் அடங்கிய நுண்சாதனமொன்றை உடலினுள் பொருத்துவதன் மூலம், அச்சாதனத்திலுள்ள நனோ அளவான துவாரங்களினூடாக நீண்ட காலத்திற்குத் தேவையான அளவுப் பிரமாணப்படி அந்த ஓமோன் உடலினுள் விடுவிக்கப்படும்.

மகிழா : இதனைவிட வேறு எவ்விதம் மருத்துவத்துறையில் நனோ பயன்படுகின்றது.

தனுசிறி : வைத்தியசாலைகளில் கிருமிகள் பரம்பலைத் தடுப் பதற்கும், சத்திரசிகிச்சை கூடங்களிலும், சுகாதாரப் பாதுகாப்பு பெறும் பொருட்டும் நுண்ணுயிர் கொல்லி களிம்பு பயன்படுகின்றது. இதனைதவிர நனோவடிகளினால் வைரசு உடலினுட் புகுவது தடுக்கப்படுகின்றது.

சுவாதிகா : இதனைவிட நனோ அளவிலான கூட்டுப்பொருள் மூலம் பற்குழிகளை அடைக்கவும், செயற்கை எலும்புகளை உற்பத்தி செய்யவும் ஆர்வம் காட்டப்படுகின்றது.

றோஜீத் : நனோ மூலம் பாதிப்புக்கள் ஏற்படாதா?

சஜீத் : ஏன் இல்லை. நனோ துணிக்கைகள் வளிமண்டலத்தையும் நீரையும் சென்றடைகின்றது. அத்துடன் சுவாசப் பாதயூடாக

அல்லது உணவுக் குழாயினூடாக உடம்பினுள் செல்வதால் பாதிப்பான சுகாதார விளைவுகள் ஏற்படும்.

மகிழா : மிக நுண்ணிய அளவிலான போர் ஆயுதங்களை உற்பத்தி செய்து மனிதர்களை அழிக்க முடியும். நனோ அளவிலான நச்சு இரசாயனம் போரில் பயன்படுத்தப்படலாம். இலத்திரனியல் கூறுகளின் அதீத உற்பத்தியினால் சமூகப் பிரச்சினைகளும் ஏற்படும்.

பிரியன் : அதாவது யப்பானின் ஹிரோசிமாவில் ஏற்பட்ட அழிவு போல ஏற்படும் இல்லையா?

மகிழா : சகல பிரச்சினைகளுக்கும் உண்மையிலே தொழினுட்பமோ நவீன கண்டு பிடிப்புக்களோ காரணமல்ல. அவற்றின் தவறான பாவனையே காரணமாகும்.

சுவாதிகா : எமது சுற்றுலா நிறைவடைகின்றது. இனி நாம் எமது பாடசாலையை நோக்கிச் செல்லுவோம்.

☆☆☆



*05-10-2012* அன்று மாணவர்களால் ஆசிரியர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிரேஷ்ட மாணவ தலைவன் சி. நிருஷாந் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆசிரியர்கள் ஆசிரியர் கீதம் இசைக்கின்றனர்.




*05-10-2012* அன்று உலக உளநல நாள் நிகழ்வு வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியை திருமதி றோ. றங்கநாதன் தலைமையில் நடைபெற்றது இந் நிகழ்வில் மாணவி ஜெ. டிபினியா உரையாற்றுகிறார்.

## VALUE OF READING.

Reading is an activity that means more than the mere following of words on a page. How these aspects come to convey the intentions of the author. It is also an appreciation of the power of language. "Reading makes a full man" proves the value of reading.

The values of reading books can't be restricted with this Knowledge on this world rather than experiencing them on his own. A reader possesses wealth more precious than gold nothing but Knowledge. Books are full of many good ideas which guide our life. Reading with Concentration stimulates the mind. we feel that we have little to say in Conversation or to contribute to discussion it is probably due to neglect of good and balanced reading. Similarly we should watch our children and encourage them to read interesting books of quality.

They will often stop reading if we don't follow it up. It is a good practice to give them books as presents and discuss with them what them what they have read.

**E. Jenoseelan**
Grade - 08

★★★

## WHAT IS LIFE?

Life is a Challenge, meet it.
Life is a gift, accept it.
Life is a sorrow, overcome it.
Life is a tragedy, face it.
Life is a duty, perform it.
Life is a game, play it.
Life is a mystery, unfold it.
Life is a song, sing it.
Life is a promise, fulfill it.
Life is a journey, complete it.
Life is a spirit, realize it.
Life is a struggle, fight it.
Life is a goal, achieve it.

**S. Kabilthas**
Grade - 07

# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

திருமதி வி. விமலச்சந்திரன்

அந்நிய ஆதிக்கமும் மேனாட்டு மோகமும் தலைவிரித்தாடிய பாரத தேசத்தின் அடிமைத் தளையை நீக்கப் பல்வேறு தேச விடுதலையாளர்களும், கவிஞர்களும், அறிஞர்களும் தோன் றினர். அந்நேரத்திலே அனற்பிழம் பாகத் தமிழ்நாட்டின் எட்டயபுரத்திலே தோன்றி தன் கவிதைகளால், கட்டுரை களால் பத்திரிகைத் தொண்டால் பாரதத்தை விழிப்புறச் செய்தவனே மகாகவி சுப்பிரமணியபாரதி.

தமது கவிதையாற்றலையும் வித்துவச் செருக்கையும் வெளிப்படுத்தக் கவிஞர் பலர் தோன்றிய காலத்திலே எளிமையான நடையிலே, சாதாரண மக்களும் புரிந்து விழித்தெழ வேண்டும் என்ற உணர்வின் உந்துதலால் கவிதை எழுதியவனே பாரதி. விடு தலைக் கவி, புரட்சிக்கவி, புதுமைக்கவி, புதுயுகக் கவி எனப் பல்வேறு பெயர் களால் பாரதி அழைக்கப்பட்டாலும் தமிழ் இலக்கிய உலகம் அவனை என்றும் மறவாத கவிஞன் ஆக்கியது அவனது குயில்பாட்டு, கண்ணன் பாட்டு என்பனவாகும்.

நாட்டு மக்கள் நலம்பெற்று வாழ் வதற்காகப் பாடல்கள் பல பாடிய அவருடைய நெஞ்சம் நாட்டு விடு தலையை மட்டும் பாடி அமைய வில்லை. நாட்டு மக்களின் நல் வாழ்வுக்கு இடையூறாக இருந்து வந்த பல்வகைக் கொடுமைகளையும் எதிர்த்துச் சாடியது. பெண்ணுரிமை, சாதிப்பாகுபாடு, மூடநம்பிக்கைகள் என்பனவற்றைச் சாடுவனவாக அவரது கவிதைகள் உள்ளன. "சாத்திரங்கள் பல தேடினேன் அங்கு சங்கையில்லாத வன் சங்கை யாம், பழங் கோத் திரங்கள் சொல்லு மூடர்தம் பொய்மைக் கூடையில் உண்மை கிடைக்குமோ" எனச் சாத்திரங்களைப் பொய்மைக் கூடைகள் எனக் குறிப்பிடுகிறார்.

பாஞ்சாலி சபதம் என்னும் தனது நூலுக்கு முகவுரை எழுதிய பாரதி "தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத் தொழிலில் தூண்டினாள்" என்று கூறினார். எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தங்கள் இவையே பாரதியின் பாஞ்சாலி சபதம். பாஞ்சாலி சபதத்திலே பாண்டவர்கள் நாட்டைப் பணயமாக வைத்து இழக்கும் பகுதியைக் கூறும் போது பாரதியாருக்கு அது பழங் கதையாக மட்டும் தோன்றவில்லை. அங்கு அடிமைப்பட்டுக் கிடந்த பாரத நாட்டு உரிமையே முன்வந்து நிற்கின்றது.

கண்ணனைப் பல்வேறு பாவ நிலைகளில் கண்ணன் என் சேவகன், கண்ணன் என் தந்தை, கண்ணன் என் காதலன், கண்ணம்மா என் காதலி என்று பல்வேறு நிலைகளில் வைத்துப் பாடினாலும்கூட அவருடைய சாத்திரச் சாடல், பெண் விடுதலை, சாதிப் பாகு பாட்டு எதிர்ப்பு முதலிய கொள்கைகளே வேரூன்றிக் காணப்படுகின்றன. பாரதப் பெண் அடிமை சமூகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என


விரும்பினார். "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" எனப் பாரதி முழங்கினான். "தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி பெண்கள் திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்" என்று பாடுவதன் மூலம் நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்குமிருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" என்று தன்னுடைய புதுமைப் பெண்ணைப் பாரதியார் உயர்த்தியுள்ளார்.

கவிதைத் துறையில் பெரும் புரட்சி செய்த பாரதி பத்திரிகைத் துறையின் முன்னோடியாகவும் திகழ்கின்றார். முதன் முதலில் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் கருத்துப்படம் வெளியிட்டு சாதனை செய்தவர் பாரதியார். "சுதேசமித்திரன்" என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். தமிழ் நாட்டுப் பெண்களின் சீர், சிறப்பு, அறிவுநல விருத்திக்குத் தொண்டு செய்ய பத்திரிகைத் தொழில் தனக்குக் கிடைத்த பலமெனக் கருதினார்.

தமிழ்க் கவிதை, தமிழ் உரை நடை, தமிழ்ப் பத்திரிகை என்பன பாரதியிலிருந்துதான் மறுமலர்ச்சி அடைந்தன. தனது முப்பத்தொன்பது வருட வாழ்க்கையில் அவர் சாதித்த சாதனைகள் ஏராளம், ஏராளம். பாரதி ஒரு மகாகவி மட்டுமல்ல ஒருமகான், தீர்க்கதரிசியும் கூட.

✧✧✧

# Farming in Sri Lanka then and Now



The main occupation of our people is agriculture from ancient time. we cultivate Paddy, Kurrakkan, green gram, blackgram, maize and vegetables. Rice is our main food. In the rural areas many families eat rice and curry for lunch and dinner even Now. In the past there were no machines.

They did their work helping each other. They used oxen or buffaloes to plough the fields and to thresh the paddy. Natural manure like cow dung, green leaves and decomposed humus were used to Fertilize the soil. Both men and women worked together in their fields. Our former kings built many tanks to save the rain water. They helped the farmers in many ways to grow their crops. Then the Jaffna farmers used a mechanical device called-thula-to obtain water from the deep well. Now we use machines, chemical fertilizers, pesticides, weedeicides etc, to do our cultivation and obtain and obtain good yield.

**Jathursha Sivapatham**
Grade -7.

## வெற்றிக்கொடி நாட்டியோர்

- இயற்கை பண்பாட்டு மரபு வளப் பாதுகாப்பு மையத்தால் 2011ஆம் ஆண்டிறுதியில் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தி பசுமை அமைதி விருதுகளை எமது பாடசாலையின் 7 மாணவர்கள் பெற்றுள்ளனர்.
  தரம் 10 - செல்வி சி. நிருஷா, செல்வி சு. சுனிதா
  தரம் 11 - செல்வி சி. நிதர்சனா, செல்வன் சு. சுதர்சன், செல்வன் சி. நிருஷாந், செல்வி யோ. றெமல்ஸ்ரா, செல்வி த. கிஷாந்தி.

- 2011ஆம் ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட கோட்டமட்ட மனைப் பொருளியல் போட்டியில் செல்வி சி. நிதர்சனா முதலா மிடத்தையும், செல்வி கை. ஜிலாஞ்சலி இராண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

- இவ்வாண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு III சிறுகதைப் போட்டியில் செல்வி சி. ஜென்சிகா இரண்டா மிடத்தைப் பெற்றார். பிரிவு IV கட்டுரைப் போட்டியில் செல்வி சி. நிதர்சனா இரண்டாமிடத்தைப் பெற்றார். இவர்கள் வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

- சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி வலி வடக்கு பிரதேச செயலகத்தால் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் எமது பாடசாலையின் 5 மாணவர்கள் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.
  பேச்சுப்போட்டியில் மத்திய பிரிவில் செல்வி ஜெ. டிபினியா (முதலாமிடம்), செல்வன் ச. கபில்தாஸ் (மூன்றாமிடம்), செல்வி க. சிந்துஜா (இரண்டாமிடம்) ஆகியோரும், மேற்பிரிவில் செல்வி சி. நிருஷாவும் (முதலாமிடம்) பெற்றுள்ளனர். கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் செல்வி சு. கனிதா இரண்டாமிடம் பெற்றுள்ளார். இவர்களுக்கான பரிசில்கள் யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டன.

- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான குடும்பமட்ட சித்திரப் போட்டியில் தரம் 1 மாணவி செல்வி கி. தஸ்மி இரண்டா மிடத்தையும், தரம் 2 மாணவி செல்வி ரெ. ஜெஸ்மினி, தரம் 3 மாணவி செல்வி தி. அவின்சிகா, தரம் 4 மாணவன் செல்வன்

ஜெ. டிலான்சன் ஆகியோர் மூன்றாவது இடங்களையும் பெற்றுள்ளனர். அத்துடன் திருக்குறள் மனனப் போட்டியில் குடும்ப மட்டத்தில் தரம் 1 மாணவி செல்வி வி. டிலானி இரண்டாமிடத்தையும். தரம் 4 மாணவன் செல்வன் ஜெ. டிலான்ஷன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். மேலும் வாய்ப்பாடு மனனப் போட்டியில் தரம் 5 மாணவன் செல்வன் ச. துலக்ஷன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளார்.

- சமூக விஞ்ஞானப் போட்டியில் தரம் 11 மாணவன் செல்வன் சி. நிருஷாந் கோட்டமட்டத்தில் இரண்டாமிடம் பெற்று வலய மட்டப் போட்டியில் பங்குபற்றினார்.

- தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடத்தப்பட்ட சகலாகலாவல்லிமாலை விருத்தப்பா ஓதற் போட்டியில் தரம் 10 மாணவி செல்வி சி. நிருஷா முதலாமிடம் பெற்றுள்ளார்.

- தெல்லிப்பழை கலை இலக்கியக் களம் நடத்திய சிறுதைப் போட்டியில் செல்வன் சி. நிருஷாந் ஆறுதல் பரிசினைப் பெற்றுள்ளார்.

★★★



பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களின் சிபார்சுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 90 அடி நீளமான மாடிக் கட்டட கீழ்த்தள அடிக்கல் நாட்டுவிழா 14-01-2012 அன்று நடைபெற்றது. கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

# பட்டம்

காற்றில் பறப்பது பட்டம் - உயர்
கல்வியில் கிடைப்பது பட்டம்
கைத்திறனால் அமைவது பட்டம்
அறிவுத்திறனால் பெறுவது பட்டம்
அதன் அழகைக் காணும்போது இன்பம்
இதன் அறிவைக் கேட்கும் போதே பேரின்பம்
உயரே உயரே பறக்க நல்ல நூல் வேண்டும்
உயர் பட்டங்கள் பல பெற நல்லாசான்கள் வேண்டும்
அதன் ஆயுளே சில நாட்கள்
இதுவே ஆயுட்காலம் வரை
மழை, காற்றால் அழிந்துவிடும் இந்தத் துண்டு
இது காலத்தால் அழியாத கல்வெட்டு
ஏற்றங்கள் பல கொண்டுவரும் பட்டம்
அந்தப் பட்டங்கள் பெறுவதே எனது திட்டம்.

சு. வினிதா
தரம் - 06



* * *

# Proverbs

1. The face is the index of the mind.
2. Make hay while the sun shines.
3. A friend in need is a friend indeed.
4. Look before you leap.
5. Haste makes waste.
6. Jack of all trades is master of none.
7. All that glitters is not gold.
8. Same feathers flock together.
9. East or west home is best.
10. Time is Gold.

A. Tharsika
Grade - 06

# நலம் தரும் நட்பு

ஜெ. டிபினியா
தரம் – 08

நாம் பாடசாலைக் கல்வியில் ஈடுபடும்போது எமக்குப் பல நண்பர்கள் கிடைக்கக்கூடும். அவற்றுள் சிலர் நல்ல நண்பர்களாகவும் மேலும் சிலர் தீய நண்பர்களாகவும் காணப்படுகின்றனர். அவற்றுள் நாம் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நலமான நட்பைப் பெறலாம். சில வேளைகளில் நாம் மிகப்பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கலாம். அப்போது நல்ல நண்பர்கள் ஆனவர்கள் முயற்சி செய்து எம்மைக் காப்பாற்றக்கூடும். ஆனால் தீய நண்பர்கள் அப்படி இருக்கமுடியாது. தாம் தப்பித்தால் போதும் என்று எண்ணி நம்மை ஆபத்தில் சிக்கவைத்து விடுவார்கள். வள்ளுவரைப் பற்றி நாம் அனைவரும் நன்கு அறிவோம். அவர் மனித வாழ்க்கையில் அவசியமான, அவசியமற்ற, தேவையான, தேவையற்ற மற்றும் விருப்பு வெறுப்புக்கள் பற்றி மிகவும் அழகாகக் கூறுகின்றார். அப்படிக் கூறுபவரே நட்பையும் பல அதிகாரங்களாகப் பிரித்துக் கூறுகிறார். அவ் அதிகாரங்களாவன நட்பு, நட்பை ஆராய்தல், பழமை, தீய நட்பு என்பனவாகும். அதில் நல்ல நட்பைப் பற்றி நட்பு எனும் அதிகாரத்தில்

*"நவில்தொறும் நூல்நயம் போலும்*
*பயில்தொறும் பண்புடையார் தொடர்பு"*

என்று கூறுகிறார். அதாவது படிக்கப் படிக்க நல்ல நூலின் சிறப்பு உயர்ந்து இன்பம் தருவது போன்று பண்புடையாளர் தொடர்பும் இன்பம் தரும். அது போலவே நல்ல நண்பனானவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக

*"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு"*

என்கிறார். அதாவது ஆடை நீங்கிய போது உடனே அதனைப் பிடிக்கும் கைபோல் நண்பனுக்குத் துன்பம் வரும்போது உடனே அதைப் போக்குவதுதான் நட்பு. அது போலவே தீய நட்பிற்கு உதாரணமாக

*"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது*
*கொள்வரும் கள்வரும் நேர்"*

எனக் கூறுகிறார். அதாவது நட்பால் கிடைக்கும் பயனை எடைபோட்டுப் பார்க்கும் நண்பர் பரத்தையருக்கும் திருடனுக்கும் சமமானவர்கள் என்கிறார். அதுபோல் மகாபரதத்தில் கௌரவர்களுடன் கொண்ட நட்பின் காரணத்தால் பஞ்சபாண்டவர்கள் தனது சகோதரர்கள் என அறிந்தும் கூட கர்ணன் கௌரவருக்காக இறுதிவரை போர் செய்து உயிர் துறந்தான். இப்படி பல கதைகள் மூலம் நட்பைப் பற்றி அறியலாம். நாம் நட்பின் இலக்கணம் அறியா சிறார்களாக இருப்பினும் இவ்வாறான கதைகள் மூலம் நலம் தரும் நட்பை தேர்ந்தெடுப்போமாக.

# விசேட ஆற்றலுள்ள அதிபராக
# எமது அதிபர் தேசிய விருது பெற்றார்



கல்வித் தொகுதியினுள் பூரண அறிவுத்திறன்களுடன் தொகுதிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பெற்றுத் தந்து, சிறந்த ஆளுமையுடன் கூடிய மாணவர் பரம்பரையினை உருவாக்குவதற்கு பெறுமதிமிக்க சேவையீடுபடுவதோடு, பொதுவான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் புறம்பாக கல்வித் தொகுதியினை மேலும் விரிவுபடுத்தி, புதிய பாதைகளைத் தேடி ஆக்கபூர்வமான, ஆய்வு பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டு சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் விசேட திறன்களைப் பெற்றுக் கொடுத்த அதிபர், ஆசிரியர்களை இவ்வாண்டு கௌரவிக்க கல்வியமைச்சு தீர்மானித்தது. அவ்வகையில் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்களிலிருந்து வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் கூட்டத்தில் சிறந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களது விபரங்கள் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பப்படும். ஒவ்வொரு கல்வி வலயத்தாலும் தெரிவு செய்யப்பட்டவர்கள் மத்தியில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 6 பேர் தெரிவு செய்யப்பட்டு மாகாணங்களால் தேசிய மட்டத்துக்கு அனுப்பப்படுவர். கல்வியமைச்சினால் ஐவர் கொண்ட குழுவினால் 9 மாகாணங்களிலிருந்தும் வரும் 54 பேரிலிருந்து 25 பேர் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆயினும் இம்முறை தேசிய மட்டத்தில் 24 பேர் விசேட ஆற்றலுள்ள அதிபர், ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் எமது அதிபர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். மீப்பேயில் அமைந்துள்ள தலைமைத்துவ அபிவிருத்தி மத்திய நிலையத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இவருக்கான விருது வழங்கப்பட்டது.


# புலமைப்பரிசில் பரீட்சை -2012

இவ்வாண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு எமது பாடசாலையிலிருந்து 12 மாணவர்கள் தோற்றினர். இவர்களில் செல்வி ஜெயதாஸ் டிலக்ஷிகா 144 புள்ளிகளையும், செல்வன் சந்திரகாந்தன் துலக்சன் 138 புள்ளிகளையும், செல்வி றஜனிகாந்தன் தமிழ்மதி 117 புள்ளிகளையும், செல்வன் சுகர்ணன் நியான்சன் 93 புள்ளிகளையும் பெற்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். மேலும் செல்வி திவாசுதன் தர்சிகா (75), செல்வன் மகேஸ்வரன் சஞ்சீவன் (73), செல்வி விஜயகுமார் விஜிந்தினி (72) ஆகியோர் 70 புள்ளிகளுக்குமேல் பெற்றுள்ளனர். இவர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்த எமது தொண்டர் ஆசிரியை செல்வி தர்சினி நாகேந்திரம் அவர்களையும், சிறப்பாகச் சித்தியெய்திய மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.



உலக கைகழுவுதல் தினம் 15-10-2012 அன்று எமது பாடசாலையில் நடைபெற்றது. யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் தெல்லிப்பழை மேற்பார்வை சுகாதார பரிசோதகர் திரு. பொ. கோபாலேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு கைகழுவுதலின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறினார்.

தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா 16-01-2012 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவனும், வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான திரு. மு. ஐயாத்துரை அவர்கள் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.



# கற்றுயர்ந்து மனிதனாவோம்

பொன்னாய்க் கடவுள் தந்த வாழ்வை வீணாக்கி
மண்ணாய்ச் சிதைத்து அழித்து விட்டு
கண்ணாய் நினைத்திட்ட கல்வியைக் கோட்டைவிட்டு
தன்னால் தறிகெட்ட மாந்தர் பலர்

நிலையற்ற பொருள் தேடி
நிலையில்லாத தொழில் தேடுவோர்
நிலையான கல்வியினால்
நிம்மதியை நாட எண்ணார்.

கல்வியினால் உயர்வு பெற்றோர்
கண்முன்னே பலர் உள்ளார்
நல்லிதயம் கொண்டு கற்றால்
நானிலத்தில் என்றும் உயர்வுண்டு.

சுயநலம் கொண்டு எமக்கென வாழாது
பொதுநலத்தோடு வாழ்வதுதான் வாழ்வாம்!
சுயநலம் எம்மையே வாழ்விக்கும்
பொதுநலமே எல்லோரையும் வாழ்விக்கும்

கல்வியினால் மனிதனாகி நிலைபெறுவோம்
காலமுழுதும் இன்பத்தோடு வாழ்ந்திடுவோம்.

சி. நிருஷாந்
தரம் - 11

## பொங்கல் வாழ்த்துமடல் போட்டி

மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்குடன் தைப்பொங்கல் வாழ்த்துமடல் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. பிரிவு 1 (தரம் 4, 5), பிரிவு 2 ((தரம் 6, 7, 8), பிரிவு - 3 (தரம் 9, 10, 11) என மூன்று பிரிவுகளில் நடத்தப்படும் இப்போட்டியில் மாணவர்கள் சுயமாக தமது வாழ்த்து மடல்களை உருவாக்கி 09-01-2013ற்கு முன்னர் சித்திர பாட ஆசிரியரிடம் ஒப்படைக்கவும். முதல் மூன்று இடங்கள் பெறுவோருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.



*மீண்டும்.....* (முதலாம் பக்கத் தொடர்ச்சி )


மேலும் 90 அடி நீளமான மேடையுடன் கூடிய மேல்மாடி மண்டபம் இந்திய உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என எதிர்பார்த்துள்ளோம். யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் சிறுவர் பூங்கா அமைப்பதற்கும், சரஸ்தி சிலை, நிறுவுனர்களின் சிலைகளுடன் அழகிய முகப்பினை அமைப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். அடுத்த ஆண்டில் அவை நிறைவாகும். மின் சாரத்தைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அது கிடைப்பின் எமது கணனி அலகை முழுமையாகத் தொழிற்படுத்த முடியும்.

"மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்றான் மஹாகவி. அந்த மிடுக்குடன் நடைபயில்வோம். வாருங்கள்! வந்து தோள் கொடுங்கள்!.

*காலத்தினாற்......* (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி )

- பிரான்சில் வதியும் பழைய மாணவனான திரு. உமாபதிசிவம் பரராஜசிங்கம் அவர்கள் மைதானச் சுற்றுப்புறத்தில் பயன்தரு மரங்களை நாட்டியுள்ளார்.
- உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் சமையலறை அமைக்கப் பட்டுள்ளது. இதற்கான வேலைகளில் பெற்றோர், பழைய மாணவர்களான திருவாளர்கள் சி. யசோதரன், ஆ. விமலகாந்தன், சி. சிவரூபன், க. ஈஸ்வரன், ஐ. அன்பழகன், க. பேரின்பநாதன், சி. ஜெயதாஸ் ஆகியோர் தொண்டு அடிப்படையில் உதவியுள்ளனர்.
- சிறுவர் முற்றத்தைச் சண்டிலிப்பாயில் இருந்து கீரிமலைக்கு திரு. செ. கேதீஸ் வரன் இலவசமாக ஏற்றிவந்து தந்துள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான
நன்றிகள் உரித்தாகுக.



சி. சிவறூபன்
தரம் - 11


**நகுலன்**
செப் - டிசெம்பர் - 2012



வழிகாட்டல் :
திரு. கூ. ஸ்ரீகுமரன்
(அதிபர்)

ஆசிரியர் :
திரு. செ. கமலக்கண்ணன்


வெளியீடு :
நூலகப் பிரிவு
யா/ கீரிமலை நகுலேஸ்வர ம.வி

தொலைபேசி : 0213207660

மின்னஞ்சல் :
Keerimalainaguleswara.yahoo.com

# கிருபா
# லேணர்ஸ்

**அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை**



- வாகனப் பயிற்சிகள் கிளை நிறுவனங்களில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றை பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுநர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்
- வான், கார், முச்சக்கர வண்டி, மோட்டர் சைக்கிள், லான்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம்
- ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர் பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.

## Kiruba Learners



**தலைமைக் காரியாலயம் :**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 222 3200

| | |
|---|---|
| சாவகச்சேரி - | 021 492 3202, 021 227 0700 |
| நெல்லியடி - | 021 300 6550, 071 454 0957 |
| சுன்னாகம் - | 021 224 2022, 071 454 6956 |
| கிளிநொச்சி - | 021 228 5505, 071 454 6955 |
| விசுவமடு - | 021 320 1515, 071 454 6955 |

இப்பொழுது பருத்தித்துறை
01ஆம் கட்டைச் சந்தியில்
021 492 3201
071 454 6958